ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1916/4 - 2015 මැයි මස 25 වැනි සඳුදා - 2015.05.25

1916/4 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல: BD/BD/LND/3/5/12

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமை. குறிப்பு இல: LD/05/2009/E/30

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

பதுளை மாவட்டத்தில், பதுளை பிரதேசச் செயலாளர் பிரிவில், பிரிவு இல. 8 மல்வத்த (பதுளை நகர சபை வட்டாரத்தில்) 78 ஜே பதுளுபிடிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகரினால் வரையப்பட்டுள்ள ப/673 ஆம் இலக்க 2015.02.10 ஆம் திகதிய வரைபடத்தில் துண்டு இலக்கம் 03 மற்றும் 4 எனக் காட்டப்பட்டுள்ள 0.2889 ஹெக்டயர் மொத்த விஸ்தீரணம் கொண்ட கீழே விபரிக்கப்படும் காணித் துண்டுகள் இரண்டு.

பதுளை உயர் தொழிநுட்ப அலுவலகத்திற்காக காணியை எடுத்தல்

**1. துண்டு இல: 3**

**உரிமை கோருவோர்: தீப்திபிரசன்ன ஏக்கநாயக்க; முன் உரிமை மற்றும் வேறுவிடயங்கள்; விஸ்தீரணம்: 0.2744 ஹெக்டயார்.**

வடக்கு: காணித்துண்டு இல.01 மற்றும் 02; கிழக்கு: காணித்துண்டு இல.02 மூ. பீ. 2946 யில் காணித்துண்டு இல. 12 மற்றும் ரிசட் ஜயவர்தனவிற்கு சொந்தமான மஹபதுள்ளவகவயல்; மேற்கு: மூ. பீ. 2946 இல் காணித்துண்டு இல. 12 மற்றும் ரிசட் ஜயவர்தனவிற்கு சொந்தமான மஹபதுள்ளவயல், கீரின் லேன் டிரய்வ் மற்றும் காணித்துண்டு இல. 01; தெற்கு: காணித்துண்டு இல. 01;

**2. துண்டு இல: 4**

**உரிமை கோருவோர்: தீப்திபிரசன்ன ஏக்கநாயக்க; முன் உரிமை மற்றும் வேறுவிடயங்கள்; விஸ்தீரணம்: 0.0145 ஹெக்டயார்.**

வடக்கு: அப்துல் வஹாமொகமட் சப்ராஸிற்கு சொந்தமான மஹபதுள்ளவக வயல்மற்றும் காணித்துண்டு இல.01;

கிழக்கு: காணித்துண்டு இல.01; மேற்கு: கீரின் லேன் டிரய்வ்; தெற்கு: கீரின் லேன் டிரய்வ் அப்துல் வஹாமொகமட் சப்ராஸிற்கு சொந்தமான மஹபதுள்ள வகவயல்;

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறிப்பிடப்பட்ட காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட முறையினையும் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2015, மே 18.

06-233

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.